KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY

COUNCIL MONTH OF SEPTEMBER

Minutes of the Meeting held on 30.09.2019

| Date of council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 30.09.2019 | 1884 | **மன்றப்பொருள்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகர்மன்றத்தீர்மானம் எண்.1858 நாள். 09.08.2019 ல் இந்நகராட்சிப்பகுதிகளில் TURIP 2019-20 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு முதன்மைச்செயலாளர் ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2019-20க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கீழ்க்கண்ட பணிகளை 2019-20ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்ட மானிய நிதி ரூ.2.50 கோடியும் மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/ நில அபிவிருத்திக்கட்டணம் ரூ.3.50கோடியும் நகராட்சி பங்களிப்பு ரூ.4.00கோடியும் ஆக மொத்தம் ரூ.10.00கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடித நக.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் உத்திரவின்படி கீழ்க்கண்ட சாலைப்பணிகளை மேற்கொள்ள சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீட்டர்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| **சிப்பம் எண்.1** | | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அழகாபுரி தெரு சாலை, எல் ஆர்.நகர் சாலை, கீழ லட்சுமி புரம் சாலை, எல்.எப்.ரோடு வடக்கு பகுதி சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் | 3.400 | 4.20 | 189.00 |
| **சிப்பம் எண். 2** | | | | |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் முதல் ஓடக்கரை வரை உள்ள சாலை, தைக்காத்தெரு சாலை, புதுக்கடைத்தெரு சாலை , வண்ணாக்குடி கடைத்தெரு, வீரசடைச்சி யம்மன் கோவில் தெரு சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் | 3.400 | 4.20 | 198.00 |
| **சிப்பம் எண். 3** | | | | |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட தாயிம்பள்ளி சந்திப்பு முதல் மங்களவாடி வரை உள்ள சாலை, மாட்டுக்குளம் தெரு சாலை, சுலைமான்நகர் சாலை, தேங்காய்பண்டகசாலை தெரு சாலை, மாட்டுக்குளம் முதல் அண்ணாநகர் வரை உள்ள சாலை , மரைக்கார்பள்ளி தெரு சாலை , கொச்சியார் தெரு ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் | 4.100 | 4.20 | 225.00 |
| **சிப்பம் எண்.4** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட தீவுத்தெரு சாலை, கற்புடையார்பள்ளிவட்டம் சாலை, நயினார் தெரு முதல் கோமான் தெரு வரை உள்ள சாலை, கோமான் தெரு சாலை, கோமான் மேலத்தெரு சாலை, அருணாச்சலபுரம் தெற்கு தெரு சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் | 3.800 | 4.20 | 207.00 |
| **சிப்பம் எண்.5** | | | | |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட கோமான்புதூர் சாலை,சேதுராஜா தெரு சாலை, உச்சிமாகாளியம்மன்கோவில் தெரு சந்திப்பு முதல் இரத்தினாபுரி வரை உள்ள சாலை, மருத்துவர் தெரு சாலை , இரத்தினாபுரி நடுத்தெரு சாலை , மேலபள்ளி தெரு சாலை , பாஸ்நகர் சாலை , நியுகாலணி தெரு ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல செய்தல் | 3.300 | 4.20 | 181.00 |
| | **மொத்தம்** | **18.000** | | **1000.00** |

1885

**மன்றப்பொருள்: 2**

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கடையக்குடி மனுவேல் நகர் சாலையானது மண் சாலையாக இருப்பதால் அப்பகுதி பொதுமக்கள் நலன்கருதியும் அப்பகுதி மக்கள் கோரிக்கையின்படியும் மேற்கண்ட சாலையினை புதியதாக தார்சாலையாக அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 30.00 இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 1886 | **மன்றப்பொருள்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் சதுக்கைத்தெருவிற்கும் நயினார் தெருவிற்கும் இடையிலான சாலையானது (பெரிய பள்ளி சாலை) பள்ளமாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் கருதி அச்சாலையினை பேவர் பிளாக்கல் அமைத்து மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1887 | **மன்றப்பொருள்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலகத்தில் மின் கட்டணத்தினை குறைத்திடும் பொருட்டு அலுவலகத்தில் கூடுதலாக சூரிய ஒளி மின் தகடு (Solar Pannel) பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியில் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1888 | **மன்றப்பொருள்: 5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டப்பணிகளில் நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளை சேகரித்திட Battery Opereted Vehicle 25 எண்ணம் வாங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் அதற்குரி பேட்டரிகளுக்கு Charge ஏற்றுவதற்குறிய மின் கட்டணத்தினை குறைத்திடும் நோக்கத்தில் கூடுதலாக சூரிய ஒளி மின்தகடு (Solar Pannel) பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியில் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1889 | **மன்றப்பொருள்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய சந்திப்பு மற்றும் வழிபாட்டுதலங்கள் அமைந்தள்ள YUF சங்கம் அருகில், எல்.எப்.ரோடு கூட்டுறவு சங்கம் அருகில் மற்றும் மங்களவாடி ஆகிய மூன்று இடங்களில் பொதுமக்கள் நலன்கருதி சிறிய உயர் கோபுர மின் விளக்கு அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியில் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1890 | **<u>மன்றப் பொருள்:7</u>**<br>**காயல்பட்டணம் நகராட்சியில் ஈப்பு வாகனம் எண். TN 92 A 6369 ல் பயன்பாட்டில் உள்ளது. குடிநீர் பணிகள் மற்றும் நகரில் நடைபெற்று வரும் பல திட்ட பணிகளை பார்வையிட வேண்டியதிருப்பதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள ஹெட் லைட், வைபர் மோட்டார், பிரேக் ஆகியவற்றில் உள்ள பழுதுகளை சரி செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4800/- னை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியில் இருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலக குறிப்பு-</u>**<br>**அனுமதி வழங்கலாம்.**<br>**<u>கோப்பு எண். இ1/612 / 2019</u>** | அனுமதிக்கப்பட்டது |
| | 1891 | **<u>மன்றப்பொருள்:8</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கோமான் நடுத்தெரு ஆக்கிரமிப்பு தொடர்பாக எம்.என். சாகுல் ஹமீது என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.3169/2019 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.என்.சண்முக செல்வன் என்பவர் ஆஜராக உள்ளார். அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/– மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு–</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>ந.க.எண். 70/2017 அ3</u> | அனுமதிக்கப்பட்டது |
| | 1892 | **<u>மன்றப்பொருள்:9</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கடையக்குடி பகுதிக்கு கொம்புத்துறை என்ற பெயர் உள்ளதாகவும் அது தொடர்பாக திரு.எஸ்.ஏ.ஸ்டீபன் பட்டங்கட்டியார் என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.108106/2019 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜாராஜன், என்பவர் ஆஜராக உள்ளார். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு–<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1073/2019/அ4 | |
| | 1893 | **மன்றப்பொருள்:10**<br><br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட அப்பா பள்ளி தெருவில் உள்ள அப்பா பள்ளிவாசலில் அனுமதியின்றி கட்டப்பட்டு வருகின்ற கட்டிடம் தொடர்பாக திரு.மீரா சாகிப், என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.18613/2019 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன், என்பவர் ஆஜராக உள்ளார். அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு–<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1074/2019/அ4 | அனுமதிக்கப்பட்டது |
| | 1894 | **மன்றப்பொருள்:11**<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் திரு.எப்.முனைவ்ரா என்பவர் 2008–09, 2009–2010ஆம் ஆண்டுகளில் செய்த பணிகளுக்கான வைப்புத் தொகையினை வழங்கக்க கோரியதின் பேரில் பொறியியல் பிரிவில் இருந்த பெறப்பட்ட கணக்கீட்டு பட்டியல்படி ரூ.1,47,162/–ல் அனைத்தும் காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதாலும், மேலும் தணிக்கை பிரிவு அறிக்கைபடி ரூ.16,918/– தனியருக்கு பிடித்தம் செய்யப்படவேண்டியுள்ளதாலும், மேற்படி மொத்த தொகையில் ஈடுசெய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை ரூ.1,30,244/–னை தனியருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு–<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 87/2019/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1895 | **<u>மன்றப்பொருள்:12</u>**<br>மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவு மற்றும் பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் இரண்டு ஆண்டு கால சாதனைகள் குறித்து இரண்டு பேனர்கள் மூலம் பொது மக்கள் அறியும் வண்ணம் காயல்பட்டணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் கடந்த மார்ச்2019ஆம் மாதத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பேனர்கள் வைக்கப்பட்டதற்காக திரு.ஹேமந்த்பிரபு, பணி ஆய்வாளர் என்பவரால் செலவினத் தொகை ரூ.5920/– வழங்கப்பட்டுள்ளது. எனவே அந்த தொகையினை தனியரின் பெயரில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்ற அனுமதிக்கலாம்.<br><u>அலுவலககுறிப்பு–</u><br>தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்ற அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 117/2018/அ3</u> | அனுமதிக்கப்பட்டது |
| | 1896 | **<u>மன்றப் பொருள்:13</u>**<br>**காயல்பட்டணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் ந.க.எண்.17731/2019/பி3 நாள் 14.8.2019ன் படி, நகராட்சி குப்பை கிடங்கின் அருகில் உள்ள நிலத்தடி நீரினை எடுத்து உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தூத்துக்குடி அவர்களால் நீர் பகுப்பாய்வு, செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வகைக்கு கட்டணமாக ரூ.23,552/-னை தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**<u>அலுவலக குறிப்பு-</u>**<br>**தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்**<br>**<u>கோப்பு எண். இ1/612 / 2019</u>** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1897 | **<u>மன்றப்பொருள்:14</u>**<br>தென்காசி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு. கித்துரோலி என்ற ராஜா முகம்மது என்பவரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ந.க.எண்.13668/2015/கே நாள் 30.4.2015ன்படி காயல்படணம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக தென்காசி நகராட்சியில் இருந்து விடுவிப்பு உத்தரவி எதுவும் பெறப்படாமல் தனியர் இந்கராட்சியில் பணியேற்பு எதுவும் செய்யாத நிலையில் மேற்ப நபர் வழக்கு எண் 7858/2019 மற்றும் 845/2019ல் தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தொர்பாக இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம். ராஜராஜன் என்பவர் ஆஜராகிய வகைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு–</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>ந.க.எண். 429/2015/அ1</u> | அனுமதிக்கப்பட்டது |
| | 1898 | **<u>மன்றப்பொருள்:15</u>**<br>மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவு படி, உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வருகின்ற மற்றம் முடிவுற்ற பணிகள் குறித்த விபரத்தினை 2019ஆம் ஆண்டு தொழில் மலரில் விளம்பரம் செய்யும் பொருட்டு, இந்நகராட்சியின் பணிகள் குறித்து தினத்தந்தி மற்றம் மாலை மலர் ஆகிய பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக முறையே ரூ.23,688/– மற்றும் ரூ.16,800/– ஆகியவற்றினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு–</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 1142/2019/இ1</u> | அனுமதிக்கப்பட்டது |
| | 1899 | **<u>மன்றப்பொருள்:16</u>**<br><br>காயல்பட்டணம் நகராட்சி புதிய அலுவலக கட்டிட மேல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் வைத்து பல்வேறு விழிப்புணர்வு கூட்டங்கள், பயிற்சி வகுப்புகள் மற்றும் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்படுவதற்கு தேவையான நாற்காலிகள் வாங்குவதற்கு மன்ற அனமதி எண். 1774 நாள் 31.01.2019ல் உத்தேச செலவு தொகை ரூ.140000/– த்திற்கு அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து 100 நாற்காலிகள் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வாங்கப்பட்டுள்ளது. தற்போது வாங்கப்பட்ட செலவு சீட்டின்படி ரூ.146320/— ஆகியுள்ளது. எனவே கூடுதல் தொகை ரூ.6320/—க்கு ஆணையர்(பொ) முன் அனுமதி பெறப்பட்டு செலவு தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்க வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு—<br>முன் அனுமதி பெறப்பட்டு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><u>ந.க. எண்.அ3/458/2014</u> | |
| | 1900 | **<u>மன்றப்பொருள்:17</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:31159/2018/டிபி3, நாள்:05.03.2019-ல் தமிழ்நாடு அரசிதழ் எண்:43, பகுதி III பிரிவு 1(a), நாள்:04.02.2019-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆணை வெளியிடப்பட்டுள்ளதன்படி தற்பொழுது கட்டிட விண்ணப்பத்துடன் கூர்ந்தாய்வு கட்டணமாக பெறப்படும் ரூ.500-ஐ பதிவு கட்டணமாக தொடர்ந்து வசூலிக்க வேண்டும் எனவும், கூடுதலாக விதி எண்:7(2)-ல் குறிப்பிட்டுள்ளவாறு, நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வுக்கு கட்டணம் உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் எனவும்,விதி 14-ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், விதிகளின்படி கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட புதிய விதிகளின் கட்டிட அனுமதி வழங்கப்படுவதற்கான காலம் மாற்றியமைக்கப்பட்டு இதற்குண்டான வசூல் செய்யப்பட வேண்டிய தொகையை உயர்த்தி பின்வருமாறு புதியதாக பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 01.10.2019-ம் தேதி முதல் அமுலுக்கு வரும்படி மாவட்ட அரசிதழில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306(1)-ன்படி மாவட்ட | அனுமதிக்கப்பட்டது |

அரசிதழில் பிரசுரம் செய்யவும் இதற்குண்டான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

காயல்பட்டணம் நகராட்சி திருத்தப்பட்ட புதிய கட்டிட-அனுமதி கட்டண விவரம்

| வ.எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | விவரம் | தற்போதைய கட்டணம் (ரூபாய்) | 01.10.2019 முதல் அமுல்படுத்த உள்ள புதிய கட்டணம் | அளவு விவரங்கள் | எவ்வளவு காலத்திற்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 197 (1) (பி) மற்றும் 201,2015 | 1 குடிசை அல்லாத ஒரு கட்டடத்தை கட்ட அல்லது புதுப்பித்துக்கட்ட (மாறுதல் செய்தல், கூடுதல் கட்டடம் கட்டுதல் முதலியன அடங்கும்) அனுமதி அளித்தல் | - | - | - | - |
| | | (அ) குடியிருப்பு வீடும் ஓட்டுக்கூரை, தகரக்கூரை,சிமெண்ட் தகரக் கூரை மற்றும்லைட் ரூப் அமைக்க | 75.00 | 125.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் |
| | | (ஆ) தட்டோடு மற்றும் ஆர்.சி.சி.கட்டடம் தரை கீழ் தளம் (Basement Floor) தரை தளம் (Ground Floor) கட்ட உரிமையாணைக் கட்டணம் | 75.00 | 125.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் |
| 1. | 197 (1) (பி) | முதல் மாடி கட்டடம் கட்ட உரிமையாணைக்கட்டணம் | 100.00 | 150.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இரண்டாவது மாடியும்அதற்கு மேலும் தளம் கட்ட உரிமையாணைக்கட்டணம் | 150.00 | 225.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் | |
| | | | | (இ) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களைக் கட்ட உரிமையாணைக்கட்டணம் | - | - | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் | |
| | | | | தட்டோடு, ஆர்.சி.சி மற்றும் ஏ.சி.ஷீட்தரை கீழ்த்தளத்திற்கு (Basement Floor) தரை தளம் (Ground Floor) உரிமையாணைக்கட்டணம் | 150.00 | 225.00 | | | |
| | | | | முதல் மாடிக்கட்டடம் தட்டோடு ஆர்.சி.சி மற்றும் ஏ.சி.சீட் கட்டுமானம் | 200.00 | 300.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் | |
| | | | | இரண்டாவது மாடியும் அதற்கு மேலும் தளம் கட்ட அனுமதி கட்டணம் | 300.00 | 450.00 | 10 சதுர மீட்டர் | ஐந்து வருடங்கள் | |
| | | | | புதியதாக ஒரு கழிப்பிடம் கட்ட அல்லது புதுப்பிக்கக்கட்டணம் (கட்டிட பரப்பில் அடங்காத பட்சத்தில்) | 50.00 | 200.00 | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து வருடங்கள் | |
| | | | | செப்டிக் டேங்க் புதியதாகக் கட்ட அல்லது புதுப்பித்துக்கட்ட | 100.00 | 200.00 | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து வருடங்கள் | |
| | | | | கவர் அல்லது வேலி அமைத்தல் ஒவ்வொரு 2.40 மீட்டர் உயரத்திற்கு வேறுபடாமல் | - | 100.00 | ஒவ்வொரு 10 மீட்டர் நீளத்திற்கும் | ஐந்து வருடங்கள் | |
| | | 2. | 208,210 | குடிசை,கிடுகு செட் முதலியன கட்டுவதற்கு (குடிசை என்ற பதத்தின் வரும் தற்காலிக அமைப்பு | - | 200.00 | 10 சதுர மீட்டருக்கு | ஐந்து வருடங்கள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அல்லது அது போன்ற சிறிய கட்டட அமைப்பு) | | | | |
| | 207,197 முதல் 199 | (1)கிணறு அல்லது ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி அளித்தல் இட அமைப்பு ஒப்புதலுக்கு | 100.00 | 300.00 | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒரேமுறை | ஐந்து வருடங்கள் |
| | | (2) கட்டிட வரைபட கூடுதல் நகல் | 40.00 | 100.00 | - | - |
| 3. | 197 (1) (எ) | குடிசை நீங்கலாக கட்டடம் கட்டுவதற்கும் இடம் அங்கீகாரம் செய்தல் (Site approvel) | 100.00 | 200.00 | - | - |
| | | (அ) குடியிருப்பு மனை<br>(ஆ) குடியிருப்பு அல்லாத மனை | - | 300.00<br>600.00 | ஒரு முறை<br>ஒரு முறை | ஐந்து வருடங்கள் |
| 4. | 217 (1) | தெருவோரங்களில் கட்டட சாமான்களை சேமித்து வைக்கக் கட்டட உரிமக்கட்டணத்தில் சதவிகிதம் வசூல் செய்யப்படும். இத்தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது | 25 சதவீதம் வசூல் செய்யப்படும் இத்தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது | 50 சதவீதம் வசூல் செய்யப்படும்இத் தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது. | ஒரு முறை | ஐந்து வருடங்கள் |
| 5 | 175,176, 177 | காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டுமனைகளாகவும் பிரித்து (Layout) மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு | - | 25000.00 | ஒரு ஏக்கர் | ஒரு முறை |
| 6. | 183 (2) | (அ)படிகள் (1.08ச.மீ அல்லது 12 ச.அடிக்கு | - | 40.00 | ஒரு சதுர மீட்டர் | நிதி ஆண்டு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மேற்பட்டால்) | | | அதன் பாகம் | | |
| | | | | 2.பொதுத் தெருக்களிலும் நகராட்சி ஆளுகையிலுள்ள பொது இடங்களிலும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் | | | | | |
| | | | | (அ)வீட்டு விழாக்களிலும்,வியாபார நோக்கு இல்லாத இதர விழாக்களிலும் பந்தல் போடுவதற்கு | - | 20.00 | ஓவ்வொரு ச.மீ ஒன்றுக்கு அதன்பாகம் | 10 நாள் | |
| | | | | (ஆ) வியாபார நோக்குடன் கூடிய ஆக்கிரமிப்புகள் | | 20.00 | ஓவ்வொரு ச.மீ ஒன்றுக்கு அதன்பாகம் | ஒரு திங்கள் | |
| | | | 186(2) | தெருக்களில் கட்டட சாமான்கள் தவிர இதர சாமான்கள் ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு | 5.00 | 10.00 | ஓவ்வொரு சதுர மீட்டருக்கு | 30 நாட்களுக்கு | |
| | | | 175,176 | மனை உட்பிரிவு செய்ய விண்ணப்பித்தும் அனுமதி பெறும் போது கட்டணம் | - | 500.00 | மனை ஒன்றிற்கு | ஒரு முறை | |
| | | | 197 | கூர்ந்தாய்வு கட்டணம் (Online) ___ல் நகராட்சியில் விண்ணப்பிக்கும் போது | | 500.00 | - | ஒரு முறை | |
| | | | - | நகராட்சியில் தடையின்மைச்சான்று பெற | | 250.00 | - | ஒரு முறை | |
| | | | - | கட்டிடத்தை இடிக்க அனுமதி கேட்டு நகராட்சியில் விண்ணப்பித்து அனுமதி பெறுவதற்கு (Demolition | - | 40.00 | ஒரு ச.மீ | ஒரு முறை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Fees) | | | | |
| | - | அனுமதி வரைபட நகல் சமர்ப்பித்து ஒப்பம் பெற (True eoe old approved plan) | - | 100.00 | நகல் ஒன்றிற்கு | - |
| | 306 | (அ)கட்டிட வரைவாளர் பொறுப்புத் தொகை | 1000.00 | 5000.00 | - | - |
| | | (ஆ)புதிய கட்டிட வரைவாளர் பதிவு செய்ய உரிமையாணைக்கட்டணம் | - | 5000.00 | - | - |
| | | (இ)ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்தல் உரிமையாணைக் கட்டணம் | 1000.00 | 1500.00 | - | ஒரு வருடத்திற்கு மட்டும் |
| | | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டணம் | | 500 | | |

அலுவலகக் குறிப்பு:

புதியதாக தயார் செய்யப்பட்ட பட்டியலின்படி 01.10.2019 முதல் வசூல் செய்ய ஏதுவாக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், இதற்கான செலவுத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 1901 | **மன்றப்பொருள்:18**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கடந்த 2017ஆம் அண்டு தெரு நாய்களுக்கு ஜெய கருண்யா விலங்குகள் நல வாரியம், நாகர்கோவில் மூலம் கருத்தடை அறவை சிகிச்சை மற்றம் வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நகரின் முக்கிய தெருக்கள் மற்றும் பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, கடற்கரை பகுதி ஆகிய பகுதிகளில் தெரு நாய்களின் தொந்தரவு மிக அதிகமாக உள்ளது என பொது மக்கள், பொது நல அமைப்புகள் வாட்ஸ்அப் மூலமாகவும் நேரடியாகவும் புகார் தெரிவிக்கின்றனர். மேலும் சில வெறிநோய் பாதிக்கப்பட்ட நாய்கள் ஆடுகள் மாடுகள் ஆகியவற்றினை கடித்து துன்புறுத்துவதாகவும் புகார் வருகின்றது. எனவே மேற்படி தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடுவதற்கும், இந்த பணியினை ஜெய கருண்யா விலங்குகள் நல வாரியம், நாகர்கோவில் என்ற நிறுவனம் மூலம் முதற்கட்டமாக 400 நாய்களுள்ளூ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினமாக ரூ.2.80 இலட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக குறிப்பு–<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண்.அ4/127/2017 | |
| | 1902 | **மன்றப்பொருள்:19**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக ஜெராக்ஸ் இயந்திரத்திற்கு பயன்பாட்டிற்கு தேவையான டோனர் பவுடர் 1Kg Block Refilling செய்த வகைக்கு பிகாசஸ்,சேரன்மகாதேவி நிறுவனத்திற்கு ரூ.2700/- மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு–<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண்.சி2/997/2015 | அனுமதிக்கப்பட்டது |
| | 1903 | **மன்றப் பொருள்:20**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகதார பிரிவு மூலம் துப்புரவு பணிகள் மற்றும் டெங்க காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்சமயம் வடகிழக்கு மழைக்காலமாக உள்ளதாலும் பிறசுகாதார நடவடிக்கைகள், குடிநீர் தொட்டிகள் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள 4 டன் பிளீச்சிங் பவுடர், 4 டன் சுண்ணாம்பு தூள், 100 லிட்டர் கிருமிநாசினியும் தேவைப்படுகிறது. எனவே இதனை அவசர அவசியம் கருதி இதனை விலைப்புள்ளிகள் பெற்று வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4,00,000/– னை பொது நிதியில் இருந்த செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண்.அ3/458/2014 | அனுமதிக்கப்பட்டது |